# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 99/2018 Deposition of Witness for : P.W.6**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்ராஜ் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 11.03.2025

**முதல் விசாரணை**

1. நான் சேனாதிபதி பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கிராம உதவியாளராக இருந்து தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன். சம்பவ சமயத்தில் வெள்ள கோயிலில் கிராம உதவியாளராக பணியாற்றி வந்தேன். தற்போது இப்போது மோகன்ராஜ் என்பவர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வந்தார். அவர் தற்போது இறந்து விட்டார். 11.10.2013 ஆம் தேதி சுமார் 12:30 மணிக்கு எங்கள் அலுவலகத்தில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் இருந்தபோது மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வெள்ள கோவில் குட்டை காட்டில் இருக்கும் காளியப்பன் வீட்டுக்கு வரும்படி தகவல் சொன்னார். நானும் கிராம நிர்வாக அலுவலரும் மேற்படி காளியப்பன் வீட்டுக்கு சென்றோம். அங்கு மதுவிலக்கு ஆய்வாளர் போலீசார் மற்றும் அதிகாரிகள் இருந்தார்கள். அருகில் காளியப்பன் இருந்தார்.

2. போலீசார் காளியப்பணை விசாரித்தபோது அவர் மதுபானம் தயாரித்த தொடர்பாக ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார். அதில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள

முதலாவது கையெழுத்து கிராம நிர்வாக அலுவலருடையதாகும். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறிய விவரங்களின்படி மேற்படி காளியப்பன் சொந்தமான கட்டிடத்தின் காம்பவுண்ட்க்குள் இருந்து பஞ்சிங் மெஷின், மோட்டார், ஹாலோ கிராம் ஒட்டும் இயந்திரம், பாட்டிலை மூடும் மூடி, சுமார் 2 மூட்டை, இரும்பு பேரல் அதற்கு அதற்கான மூடி, 35 லிட்டர் பிடிக்கக்கூடிய காலிகேன் சுமார் 200 எண்ணிக்கை, மினரல் வாட்டர் கேன் சுமார் 25 , போலி மதுபான லேபிள் சுமார்100 கட்டுகள், ஒரு பொலிரோ ஜீப், க்ரூசியஸ் ஜீப், ஒரு யமஹா பைக், ஹீரோ ஹோண்டா பைக், டாட்டா சுமோ ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள்.

3.ஆம்னிபஸ்லிருந்து சுமார் பத்து லிட்டர் எரி சாராயம் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையததாகும் இரண்டவாது கையெழுத்து விஏஓ உடையதாகும். அது ஏற்கனவே அ.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு காளியப்பன் கூறியவாறு ஆத்துக்காட்டு தோட்டத்தில் இருக்கும் பொன்னாத்தாள் என்பவர் வீட்டிற்கு வீட்டு மேற்படி காளியப்பன் எங்கள் அழைத்துச் சென்றார். அங்கு பொன்னம்மாள் என்பவர் இருந்தார். அவரை போலீசார் விசாரித்தபோது அவரும் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார் அதை போலீசார் பதிவு செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு விவரங்களின்படி அவர்கள் வீட்டில் இருந்தசுமார் 30 லிட்டர் கேனில் சுமார் 3 லிட்டர் எரி சாராயத்தை போலீசார் கைப்பற்றினார்கள். காலி கேன்கல் சுமார் 10 கைப்பற்றினார்கள். நிறைய மூடிகளை கைப்பற்றினார்கள். இரும்பு ட்ரம் மற்றும் அதற்கு உண்டான மூடி ஆகியவற்றை கைப்பற்றினார்கள்.

4. கைப்பற்றுதல் மகஜரில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம். பிறகு நாங்கள் அலுவலகத்திற்கு சென்று விட்டோம். மறுநாள் காலை 7:00 மணிக்கு மதுவிலக்கு ஆய்வாளர் எங்கள் போன் மூலம் தொடர்பு கொண்டு காளியப்பன் வீட்டிற்கு வரச் சொன்னார். அங்கு ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். மகஜரில் நானும்,

விஏஓவும் சாட்சி கையெழுத்து செய்தோம். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டவாதாக விஏஓ கையெழுத்து செய்தோம். மேற்படி பார்வை அ.சா.ஆ.21. சுமார் 9 மணிக்கு ஆத்துக்காட்டு தோட்டத்தில் இருக்கும் பொன்னம்மாள் வீட்டிற்கு சென்றோம். அங்கும் ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலில் நானும் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்து செய்தோம் என்னிடம் காட்டப்படும முதலாவது கையெழுத்து கிராம நிர்வாக அலுவவர் உடையதாகும் இரதண்டாவது கையெழுத்து என்னுடையதாகும் பார்வை மகஜர் அ.சா.ஆ.22. மேற்படி நிகழ்வு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் நடந்ததை சொன்னேன்

**1ம் மற்றும் 8 எதிரிகள் காணொலி மூலம் ஆஜர் செய்யப்பட்டார் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை**

**5 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நாங்கள் முதலில் சென்ற குடோன் யாருக்கு சொந்தமானது என்பதை உறுதி செய்ய ஆவணங்கள் எதையும் போலீசார் எங்களிடம் காட்டினார்களா என்றால் இல்லை நாங்களும் பார்க்கவில்லை. போலீசார் கிராம நிர்வாக அலுவலர் இடமும் எந்த விதமான ஆவணத்தையும் ஒப்படைக்கவில்லை அவர்கள் சொன்னதின் பெயரில் தான் நாங்கள் தெரிந்து கொண்டோம். சுமார் 1 – 3/4 மணிக்கு அங்கு சென்றோம் சுமார் 3 மணி வரை அங்கு இருந்தோம். கைப்பற்றப்பட்ட நான்கு சக்கரம் மற்றும் இருசக்கர வாகனங்களின் பதிவு எண் எனக்கு தற்போது நினைவில்லை. முதல் விசாரணையில் குறிப்பிட்ட பொருட்களை தவிர வேறு பொருட்களையும் போலீசார் கைப்பற்றினார்கள் ஆனால் அது எனக்கு நினைவில்லை.

2. நாங்கள் மேற்படி இடத்திற்கு செல்வற்கு முன்பே போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எவ்வளவு பக்கங்கள்

தயார் செய்யப்பட்டது என்று நினைவில்லை. கடைசி பக்கத்தில் மட்டும் கையெழுத்து செய்தேன். அலுவலக முத்திரை வைத்து கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை சம்பவ இடத்திலேயே வைத்தார்கள் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லவில்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் சொல்ல எழுத்தர் எழுதினார். பார்வை மகஜர் எத்தனை பக்கங்கள் தயார் செய்யப்பட்டது என்று நினைவில்லை. கைப்பற்றுதல் மகஜரும் எத்தனை பக்கங்கள் தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது கடைசி பக்கத்தில் கையெழுத்து செய்தேன். போலீசார் இதை தவிர வேறு வழக்குகளில் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்திற்கு நானும் விஏஓவும் செல்லவில்லை என்றாலும் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து ஆவணங்களில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கைது செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் என் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் எந்த விதமான பொருட்களும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2, 6, 7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்களுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.03.12 19:45:55 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.